# மின்வாரிய தொழிசங்க கூட்டு நடவடிக்கை குழு

144, அண்ணாசாலை, சென்னை- 600 002.

---

நாள் : 30-4-2020

பெறுநர்
**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர் அவர்கள்**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
144 அண்ணா சால, சென்னை 600 002

ஐயா, வணக்கம்

**பொருள்:** **தமிழக அரசு -அரசு ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு செய்வதை நிறுத்தி உத்திரவு வழங்கியது - பஞ்சப்படி நிறுத்தம் - தொடர்பாக -**

பார்வை: **1. GO. MS No. 48 dt. 27.4.2020 2. GO. MS No. 232 dt. 27.4.2020**

தமிழக அரசு தனது ஊழியர்களுக்கு ஈட்டிய விடுப்பை சரண்டர் செய்து காசாக்கிக் கொள்ளும் சலுகையை ஓராண்டுக்கு நிறுத்தி வைத்துள்ளது. அதே போல பஞ்சப்படி உயர்வை அடுத்த ஆண்டு ஜூன் 2021 வரை நிறுத்தி வைத்துள்ளதையும் மின்வாரியத்திலும் அமுலாக்கம் செய்யப்போவதாக தெரியவருகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஏற்கனவே ஈட்டிய விடுப்பு சரண்டர் செய்தமைக்காக பல மாதங்களாக பணத் தொகை வழங்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். மேலும் மின் வாரிய பணியாளர்கள் நிலையானை விதிகளின் கீழ் வருபவர்கள் என்பதால் அரசின் இந்த உத்தரவு எங்களுக்கு பொருந்தாது என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

தமிழக அரசு அறிவித்துள்ள சலுகைகளில் ( COVID-19 ) மின்வாரிய ஊழியர்கள் இடம்பெறவில்லை என்ற வருத்தமும் கவலையும் ஊழியர்கள் மத்தியில் இருந்து வருகிறது. இந்த பேரிடர் காலத்திலும் நமது ஊழியர்கள் அலுவலர்கள் பொறியாளர்கள் மிகுந்த சிரமத்துடன் தன்னலம் பாராத பணியை செய்து வருவதும் தடையில்லா மின்சாரத்தை மக்களுக்கு வழங்கி சமூக பரவலை தடுக்கும் முயற்சியில் விழிப்புணர்வுடன் அர்ப்பணிப்பு தன்மையுடன் தங்களைப்பற்றியும் தங்களது குடும்பத்தை பற்றியும் கவலைப்படாமல் கொடிய வைரஸ் தொற்று உள்ள இடங்களில் பணியாற்றி தடையில்லா மின் விநியோகம் செய்து வருவது தாங்கள் அறிந்ததே !.

கடந்த சில நாட்களுக்கு முன் தமிழகம் முழுவதும் கனமழை பெய்த பொழுது ஏற்பட்ட மின் தடையை குறைந்த பணியாளர்களை கொண்டு விரைந்து மின்தடையை நீக்கி மின் விநியோகத்தை வழங்கியவர்கள் நமது ஊழியர்களும் பொறியாளர்களும் என்பதை தங்களது பார்வைக்கு கொண்டு வர விரும்புகிறோம்.



Scanned with CamScanner

மேலும் 42,000 த்திற்கும் மேற்பட்ட காலியிடங்கள் பல ஆண்டுகளாக நிரப்பாமல் இருந்த நிலையில் அந்தப் பணிகளையும் கூடுதலாக சுமந்து பணியாற்றி வருபவர்கள் நமது மின் வாரிய ஊழியர்கள் அலுவலர்கள் பொறியாளர்கள் இதனால் வாரியத்திற்கு பல கோடி ரூபாய் லாபம் என்பதையும் தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறோம்

தமிழக அரசின் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைக்காக மின் வாரியத்தில் உள்ள சங்கங்கள் தங்களது ஊழியர்களின் ஒரு நாள் ஊதியத்தை பிடித்தம் செய்து கொள்ளலாம் என அறிவித்து அரசின் நடவடிக்கைக்கு உறுதுணையாக இருந்ததை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்

எனவே தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் மேற்கண்ட கருத்துகளை பரிசிலித்து தமிழக அரசின் மேற்கண்ட உத்தரவுகளை மின்சார வாரியத்தில் நீட்டித்து உத்தரவு வழங்கக்கூடாதென கீழ்க்கையொப்பமிட்டுள்ள தொழிற்சங்கங்களின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்

நன்றி

தங்கள் உண்மையுள்ள

1. மின்சார தொழிலாளர் சம்மேளனம்

2. கணக்காயர் கள தொழிலாளர் சங்கம்

3. மின்கழக தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

4. மின்ஊழியர் மத்திய அமைப்பு CITU

5. மின்வாரிய ஜனதா தொழிலாளர் சங்கம்

6. ஐ.என்.டி.யு.சி. (சேவியர்)

7. ஐ.என்.டி.யு.சி (கவர்ணாஜ்)

8. பொறியாளர் சங்கம் Sangam

9. தமிழ்நாடு மின்ஊழியர் காங்கிரஸ் – NLO

10. தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் HMS

11. பொறியாளர் கழகம் Association

12. கணக்கதிகாரிகள் சங்கம்

13. பீஎம்.எஸ். BMS

14. கார்டு பில்லிங் ஸ்டாப் யூனியன்

15. டாக்டர் அம்பேத்கர் யூனியன்

16. பொறியாளர் யூனியன்

17. எம்ப்ளாயீஸ் பெடரேசன்



Scanned with CamScanner